**செய்தி வெளியீடு எண் : 2418** **நாள் : 04.12.2023**

**செய்தி வெளியீடு**

**மிக்ஜாம் புயலினால் சென்னை முழுவதும் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் பொது மக்கள் பாதிக்காத வண்ணம் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று காலை 9.00 மணியளவில் நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி மையத்ததில் செயல்படும் கட்டுப்பாட்டு அறையில் ஆய்வு மேற்கொண்டதோடு மழைநீர் தேங்கும் பகுதிகளை ஆய்வு செய்தார்கள்.**

..........................................................................................................................................

நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி மையத்ததில் செயல்படும் கட்டுப்பாட்டு அறையில் சென்னையில் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறை மூலம் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளை கண்டறிந்து, அதனை சரிசெய்ய அனைத்து நெடுஞ்சாலைத் துறை பணியாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து, சென்னை ஜி.எஸ்.டி சாலையில் மழை நீரை அகற்றும் பணியையும், மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரி அருகில் சாலையில் சூழ்ந்துள்ள மழைநீரை வெளியேற்றும் பணியினை பார்வையிட்டார்கள்.

மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரி அருகில் மழைநீர் வெளியேற்றும் மோட்டார் அறையில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அங்கிருந்து வெளியேறும் மழைநீலை சாலை வழியில் அப்புறப்படுத்தாமல், அங்குள்ள கால்வாய் வழியாக திருப்பிவிட அறிவுறுத்தினார்.

மேலும், குரோம்பேட்டை (வெற்றி தியேட்டர் அருகில்) பிரதான சாலையில் ஒரு பக்கம் மழைநீர் தேங்கி ஒரு புறம் மட்டுமே போக்குவரத்து பயன்பாட்டில் இருந்தது. தேங்கியுள்ள மழை நீர் தேக்கத்தை நடுத் தடுப்பனை இடித்து மழைநீர் விரைவாக வடியவும், சாலையின் இரு மார்க்கமும் போக்குவரத்து செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தாம்பரம் வேளச்சேரி சாலையில் உள்ள நீர் தேக்கத்தை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு சாலைகளில் தேங்கியுள்ள நீரை கால்வாய் வழியாக திருப்பி விட அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின் போது, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., மற்றும் தலைமைப் பொறியாளர் திரு.சந்திரசேகர், கோட்டப் பொறியாளர் திரு.ரவி மற்றும் நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in